1977 ஆகஸ்டு 2]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

<u>(இ) மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதும், அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தவறுவதும் குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: "மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் 500 பேர் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்தும் அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தவறுவது குறித்தும்" விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு. ஓ. சுப்பிரமணியன் அவர்களும், திரு. எஸ். சண்முகம் அவர்களும் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுகுறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

*<u>திரு. ஓ. சுப்பிரமணியன்</u>: பேரவைத் தலைவர் அவர்களே மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் 500 பேர் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். இதுபோல் கல்லூரி மாணவர்கள் பல இடங்களில் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். இதனால் அவர்களுடைய படிப்பு வீணாகிறது. எனவே, இந்த விஷயத்தை ஆராய்ந்து தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டியது அவசியம். சமீப நாட்களில் சென்னையிலும் மற்றும் பெரிய நகரங்களிலும் உள்ள கல்லூரிகளில் தொடர்ச்சியாக வேலைநிறுத்தம், உண்ணாவிரதம் போன்ற நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவு செய்யப்பட்டு வரும் கல்லூரிகள் இந்த நிலையில் இருப்பதால் வருங்கால சந்ததியினரான மாணவ சமுதாயத்தில் கொந்தளிப்பும், உணர்ச்சியும் மிகுதியாக ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில கட்சிகள் அதை ஊக்குவிக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அப்போது எந்தக் கட்சிகள் என்று குறிப்பிட்டுக் கேட்டபோது காலம் வரும்போது சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். காலம் வரும் வரை காத்திருக்காது உடனடியாகக் கூறவேண்டுமென்ற நிலையில், இதை அவசியமான பிரச்சினையாகக் கருதி, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டக் கல்லூரி மாணவர்களுடைய வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. அநேகமாக, அது தமிழ் நாடெங்கும் வேலைநிறுத்தம் நடத்துகின்ற முறையிலே மாணவர்கள் இன்றைக்கும் நாளைக்கும் கூடிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அரசியல் கட்சிகள் தூண்டி விடுவதாக டெல்லியிலே பேசியிருக்கிறார்கள். இந்த வேலை நிறுத்தம் அமைதியைக் குலைப்பதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பது மட்டும் அல்ல, அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தாவிட்டால் பிரச்னை வேறு திசைக்குப் போய் விடலாம். ஆகவே இந்த அவையை ஒத்திவைத்து விவாதிப்பது மாத்திரம் அல்ல, அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் கூட்டி உட்கார வைத்து மாணவர்கள் கோரிக்கைகள் என்ன என்ன, எப்படிப் பரிசீலிக்கலாம் என்று முடிவு செய்யாவிட்டால் நிச்சயமாக அரசாங்கத்திற்கும் சில சிரமங்கள் ஏற்படலாம் என்பதை அரசு உணரும் என்று நம்புகிறேன்.

ஜூலை 31ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு அறிக்கை கொடுப்பதாக உறுதி கொடுத்தார்களாம். ஆனால் அந்த அறிக்கை கொடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது, ஆகவே மறுபடியும் மாணவர்கள் போருக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், அரசியல் கட்சிகள் பிரச்னைகளில் தலையிடாமல் இருக்க முடியாது, ஆகவே இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பது மட்டுமல்ல, இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசியல் கட்சிகளை அழைத்துப் பேசி முடிவெடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும், ஆகவே இந்தப் பிரச்னையை அரசாங்கம் சாதாரணமாகக் கருதவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, 28—7—77 அன்று மதுரை சட்டக் கல்லூரியில் உள்ள மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் ஒரு மகஜரை தயார் செய்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று சமர்ப்பித்தார்கள். சென்னையில் ஏற்பட்ட சம்பவத்தில் மாணவர்களிடத்தில் போலீசார் நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்து மகஜரைச் சமர்ப்பித்தார்கள், மறுநாள் 29—7—77 அன்று மாணவர்கள் வகுப்பறைக்குச் சென்றார்கள். இப்பொழுது நிலைமை, மதுரை சட்டக் கல்லூரி எவ்வித பதட்டமும் இன்றி நடந்து கொண்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாணவர்களிடையே அமைதியின்மை இருந்து வருவது பற்றி, 27—7—77 அன்று கல்லூரி முதல்வர்கள் மாணவர்கள் பிரதிநிதிகள், கல்லூரி கல்வி இயக்குநர் ஆகியவர்கள் அடங்கிய கூட்டம் நடந்தது. அதில் மாணவர்கள் தங்களுடைய குறைகளை அரசிடமும், சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களிடமும் எடுத்துக் கூறி பரிகாரம் காணலாமென்றும் இதுமாதிரியான வேலைநிறுத்தம், ஊர்வலம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவேண்டாமென்றும், மாணவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மாணவர்களும் இனிமேல் இது மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம் என உறுதி கூறியுள்ளார்கள்.

எனவே, இதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(3) அரசினர் தீர்மானம்:

விதி 41(3)—ஐத் தளர்த்தல்:

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

'தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41(3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களை கவன ஈர்ப்புக்கு கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(4) தகவல் கோரல்.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்திலே நடந்த சம்பவம் சம்பந்தமாக நேற்றுக் காலை ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வராத காரணத்தால் இன்றைக்கு